## பொன் வித்யாஷ்ரம் குழுமப் பள்ளிகள்

## தமிழ் இரண்டாம் மொழி

வகுப்பு: நான்கு

### ஜனவரி மாதப் பாடப்பகுதிகள்

Topic:

* இனிமை நிறைந்த பூமி (2-வாரம்)
* மலையும் எதிரொலியும் (3-வாரம்)
* இலக்கணம்: எழுவாய்/பயனிலை (4-வாரம்)
* திருக்குறள் கதைகள் (5-வாரம்)
* விளையாட்டு விழா

Activity: ஏதேனும் ஐந்து விடுகதைகள் எழுதி அதன் விடைகளையும் எழுதி வருதல்.

Scanned with OKEN Scanner

* இனிமை நிறைந்த பூமி - பாடல்

வினா - விடை

1. நமது நாட்டின் சிறப்புகள் என்று இப்பாடலில் கூறப்படுபவை எவை?

விடை: நமது நாட்டின் பெருமைகள் (சிறப்புகள்)

* உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு.
* வேளாண் தொழிலில் சிறந்த நாடு
* பழமையான கலாச்சாரத்தைக் கொண்ட நாடு
* பல சாதி, மத, இனம், மொழி வேறுபாடுகள் இருந்தாலும் இந்தியர் என்ற ஒற்றுமையுடன் வாழும் நாடு
* விஞ்ஞானிகள், சான்றோர்கள் பலரையும் ஈன்றெடுத்த வீரம் பொதிந்த நாடு.

2. தாயாகப் போற்ற வேண்டியதாக இப்பாடலில் கூறப்படுவது எது?

விடை: தாயாகப் போற்ற வேண்டியதாக இப்பாடலில் கூறப்படுவது

Scanned with OKEN Scanner

# மலையும் எதிரொலியும்

## I. வினா - விடை

(1) தந்தையும் மகனும் எங்குச் சென்று கொண்டிருந்தனர்?

விடை: தந்தையும் மகனும் மலைப்பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்தனர்.

(2) சிறுவன் பேசிய போது மலை என்ன செய்தது?

விடை: சிறுவன் பேசிய போது மலையானது எதிரொலித்தது.

(3) சிறுவன் "நான் அன்பு கொண்டவன்" என்று சொல்லியிருந்தால் மலை என்ன சொல்லி இருக்கும்?

விடை: சிறுவன் "நான் அன்பு கொண்டவன்" என்று சொல்லியிருந்தால் மலையும் "நான் அன்பு கொண்டவன்" என்று சொல்லியிருக்கும்.

(4) இக்கதையின் மூலம் மகனுக்குத் தந்தை கூறிய செய்தி யாது?

விடை:
(i) "நீ மற்றவர்களிடம் அதிகமான திறமையை எதிர்பார்த்தால் முதலில் உன்னுடைய திறமையை அதிகரித்துக் கொள்!"

Scanned with OKEN Scanner

ii) "நாம் எதை கொடுக்கிறோமோ, அதையே வாழ்க்கையும் நமக்குத் திருப்பிக் கொடுக்கிறது"

iii) உன்னுடைய வாழ்க்கை எதிர்பாராமல் நடக்கும் ஒன்றன்று. அது உன்னுடைய எதிரொலிதான் என்று தந்தை மகனுக்கு அறிவுரை கூறினார்.

## * திருக்குறள் கதைகள்

I. வினா - விடை

① பொறையுடைமை எப்போது போற்றப்படும்?

விடை: நிறை உடையவராக இருக்கும் தன்மை தம்மை விட்டு நீங்காமலிருக்க வேண்டுமானால் பொறுமையைப் போற்றி ஒழுக வேண்டும். அப்போது பொறையுடைமை போற்றப்படும்.

② மெய்ப்பொருள் காண்பதே அறிவு என வள்ளுவர் கூறக் காரணம் என்ன?

விடை: எப்பொருளை யார் யாரிடம் கேட்டாலும் கேட்டவாறே, எடுத்துக் கொள்ளாமல் அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவு என வள்ளுவர் கூறுகிறார்.

Scanned with OKEN Scanner

③ நாவைக் காக்காவிடில் ஏற்படும் துன்பம் என்ன?

விடை: நாவைக் காக்கத் தவறினால் சொற் குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர்.

④ சினம் எப்போது ஒருவரை அழிக்கும்?

விடை: ஒருவன் தன்னைத்தானே காக்க விரும்பினால் சினம் வராமல் காத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு காத்துக் கொள்ளாவிட்டால் சினம் தன்னையே அழித்துவிடும்.

⑤ நீங்கள் படித்த திருக்குறள் கதைகளுள் உங்களுக்குப் பிடித்த கதை எது? ஏன்?

விடை:

எனக்குப் பிடித்த கதை "பொறுமையும் பொறுப்பும்" இக்கதை மூலம் பொறுமையின் சிறப்பை உணர முடிகிறது. எடிசன் தன் பணியாளரிடம் பொறுமையா செயல்பட்டு, பணியாளருக்குப் பொறுப்பாக இருப்பதன் அவசியத்தை உணர்த்தியுள்ளார். அதனால் இக்கதை எனக்குப் பிடிக்கும்.



Scanned with OKEN Scanner

* விளையாட்டு விழா

I விடை - விடை

1. நம் பாரம்பரிய விளையாட்டுகள் எவை?

விடை: பாண்டி ஆட்டம், கபடி, தாயம், ஐந்தாங்கல், பல்லாங்குழி ஆகியவை நம் பாரம்பரிய விளையாட்டுகள் ஆகும்.

2. உள்ளரங்க விளையாட்டுகளின் பெயர்களை எழுதுக.

விடை: தாயம், ஐந்தாங்கல், பல்லாங்குழி ஆகியவை உள்ளரங்க விளையாட்டுகள் ஆகும்.

3. கதையில் இடம்பெற்றுள்ள பழமொழிகள் யாவை?

கதையில் இடம்பெற்றுள்ள பழமொழிகள்:-

விடை: (i) கரும்பு தின்னக் கூலியா?

ii சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்.

ஆகிய இரண்டு பழமொழிகள் கதையில் இடம்பெற்றுள்ளன.

Scanned with OKEN Scanner

* எழுவாய், பயனிலை [இலக்கணம்]

I. நிரப்புக:-

1. சொற்கள் தொடர்ந்து அமைந்து முழுமையான பொருள் தருவதே தொடர் எனப்படும்.

2. சொற்றொடரின் முக்கிய உறுப்புகள்: மூன்று. அவை: எழுவாய், செயப்படு பொருள், பயனிலை.

3. ஒரு தொடரில் யார்?, எவர்?, எது?, எவை? என்னும் வினாக்களுக்கு விடையாக வரும் சொல்லே எழுவாய்.

4. ஒரு தொடரை முழுமை பெறச் செய்யும் சொல்லே பயனிலை.

5. பயனிலையின் வகைகள்: மூன்று. அவை: பெயர்ப் பயனிலை, வினைப் பயனிலை, வினாப் பயனிலை

== x ==

Scanned with OKEN Scanner